WEB COPY

IN THE HIGH COURT OF JUDICATURE AT MADRAS

DATED: 30-09-2026

CORAM

THE HON'BLE MR. JUSTICE G.K. ILANTHIRAIYAN

CRL.OP.No.20955 of 2026

CNR:{HCMA011740282026}

Case QR

and CRL.MP.Nos.13964 & 13965 of 2026

R.Chandran ..Petitioner

Vs

V.S.Radhakrishnan ..Respondents

PRAYER: Criminal Original Petition filed under Section 528 of BNSS, praying to call for the records in S.T.C.No.198 of 2024 pending on the file of the Judicial Magistrate, Fast Track Court, Ambattur and quash the same.

For Petitioner(s): Mr.A.Kripakaran

For Respondent(s): Mr.R.Gopinath

ORDER

This petition has been filed seeking to quash the proceedings in S.T.C.No.198 of 2024, pending on the file of the Judicial Magistrate, Fast

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

WEB COPY

Track Court, Ambattur. The petitioner is the accused facing prosecution for an offence under Section 138 of the Negotiable Instruments Act.

2. According to the respondent/complainant, who is engaged in the real estate business, he was induced to purchase a property admeasuring 3 acres 88 cents and had paid a sum of Rs.1.05 crores against a total sale consideration of Rs.3.10 crores to one Karthik, from whom a power of attorney was also obtained. This being the case, the petitioner contacted the respondent and informed that the said Karthik was a fictitious person and that the real owner, also named Karthik, was with the petitioner. The petitioner further claimed to have a sale agreement with the real owner for a sum of Rs.15,00,000/- in respect of the very same property.

3. Subsequently, the parties agreed that the respondent would pay a sum of Rs.20,00,000/- to the petitioner and the balance sale consideration to the real owner, Karthik. Accordingly, a Memorandum of Understanding (MOU) was entered into on 03.07.2021 and the respondent paid the sum of Rs.20,00,000/- to the petitioner on various dates. Concurrently, a sale deed was executed. However, during a subsequent inquiry regarding the issuance

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in


Case Citation: (2026) ibclaw.in 6269 HC

Order QR

WEB COPY

of the Patta, the petitioner agreed to return the sum of Rs.20,00,000/- and issued four post-dated cheques as security. When the said cheques were presented for collection, they were returned dishonoured with the endorsement "funds insufficient".

4. Out of the four cheques, the respondent initially filed a complaint in S.T.C.No.2508 of 2023 before the XXV Metropolitan Magistrate, Egmore, Chennai, in respect of two cheques (bearing Nos.128878 & 128879). The said complaint was dismissed by an order dated 05.05.2026. The scanned version of the relevant portion of the order is extracted hereunder:


8(v). இவ்வழக்கில் எதிரி ஆஜராகி முதல் விசாரணையின் போது பொய்வழக்கு, குற்றவாளி அல்ல என்றும், காசோலை கொடுக்கவில்லை என மறுத்துள்ளார். கு.வி.மு.ச 313 (1) (ஆ) இறுதி கேள்வின் போது எதிரி பொய்சாட்சி

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

WEB COPY

என்றும், தான் வழக்கு காசோலைகளை புகார்தாரரிடம் கருப்பசாமி மகன் வேலுச்சாமி என்பவருக்கு ஜாமீனாக கொடுத்தேன் என்றும், மேற்படி காசோலைகளை புகார்தாரர் தவறாக பயன்படுத்தி தன் மீது பொய்வழக்கு தாக்கல் செய்துள்ளார் என தெரிவித்துள்ளார். இந்நிலையில் எதிரி காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையொப்பம் தன்னுடையதல்ல என மறுக்கவில்லை.

8(vi). இந்நிலையில் புகார்தாரர் தரப்பில் எதிரிக்கும், புகார்தாரருக்கும் இடையில் சட்ட பூர்வமாக நிறைவேற்றக்கூடிய கடன் அல்லது பொறுப்பு இருந்தது என்பதை நிரூபணம் செய்யவேண்டும். அவ்வாறு புகார்தாரர் தரப்பில் நிரூபணம் செய்யப்பட்டுள்ளதா? என்பதை பார்க்கவேண்டியது அவசியமாகிறது.

8(vii). புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்ட ஆவணங்கள் மூலமாக எதிரி புகார்தாரரிடம் வாங்கிய கடன் அல்லது பொறுப்பு தொகைக்கு ஆதரவாக எதிரி கொடுத்த காசோலைகள் எதிரியின் வங்கி கணக்கில் போதிய பணமில்லை என்ற காரணத்தினால் திருப்பப்பட்டது என்பதும், இது குறித்து புகார்தாரர் எதிரிக்கு அறிவிப்பு கொடுத்து பணத்தை திரும்ப செலுத்தவேண்டும் என்று கூறியுள்ளது தெளிவாக அறிய முடிகிறது.

8(viii). இந்நிலையில் மாற்றுமுறை ஆவணச்சட்டம் 139 ஆனது கீழ்கண்டவாறு தெரிவிக்கிறது.

"Presumption in favour of holder.—It shall be presumed, unless the contrary is proved, that the holder of a cheque received the cheque of the nature referred to in section 138 for the discharge, in whole or in part, of any debt or other liability."

மேலும் மாற்றுமுறை ஆவணம் சட்டம் 118(a)ஆனது கீழ்கண்டவாறு தெரிவிக்கிறது '

'(a) of consideration —that every negotiable instrument was made or drawn for consideration, and that every such instrument, when it has been accepted, indorsed, negotiated or transferred, was accepted, indorsed, negotiated or transferred for

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

WEB COPY

consideration;"

எனவே, காசோலைகளில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது இல்லை என்று மறுக்காததால் காசோலைகள் மற்றும் காசோலைகளில் உள்ள கையொப்பம் எதிரியினுடையது என்று நீதிமன்றம் தீர்மானித்து எதிரி புகார்தாரருக்கு சட்டப்படியாக கொடுக்கவேண்டிய கடன் அல்லது பொறுப்புக்காகதான் வழக்கு காசோலைகள் வழங்கியுள்ளார் என்று மாற்றுமுறை ஆவணம் சட்டம் பிரிவுகள் 118(a) மற்றும் 139 ன் கீழ் அனுமானிக்கிறது.

8(ix). ஆனால், மேற்படி அனுமானங்கள் எதிரியால் மறுத்தளிக்ககூடிய அனுமானங்கள் ஆகும். எதிரி மீதுள்ள மறுத்தளிக்கும் அனுமானங்களை எதிரி சந்தேகத்திற்கு இடமின்றி நிரூபணம் செய்யவேண்டிய அவசியம் இல்லை. மாறாக, சாத்திய கூறுகளின் மேம்பட்ட நிலைகளை முன்வைத்ததாலே போதுமானது ஆகும். வழக்கு காசோலைகளை குறித்து இந்நீதிமன்றம் புகார்தாரருக்கு ஆதரவாக செய்துள்ள அனுமானங்களை மறுத்தளிப்பதற்கு எதிரி தன் தரப்பில் சாட்சியம் அளிக்க வேண்டும் என்ற அவசியம் இல்லை. புகார்தாரர் தாக்கல் செய்த சாட்சிகள் மற்றும் சான்றாவணங்களின் அடிப்படையிலேயே எதிரி தனது சாத்தியகூறுகளின் மேம்பட்ட நிலைகளை முன்வைக்க முடியும்.

8(x). இது குறித்து மாண்புமிகு உச்ச நீதிமன்றம் Rangappa vs Sri Mohan (AIR 2010 SC 1898) என்ற வழக்கில்,

"reverse onus clauses usually impose an evidentiary burden and not a persuasive burden. Keeping this in view, it is a settled position that when an accused has to rebut the presumption under Section 139, the standard of proof for doing so is that of `preponderance of probabilities'. Therefore, if the accused is able to raise a probable defence which creates doubts about the existence of a legally enforceable debt or liability, the prosecution can fail. As clarified in the citations, the accused can rely on the materials submitted by the complainant in order to raise such a defence and it is conceivable that in some cases the accused may not need to adduce evidence of his/her

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

Case Citation: (2026) ibclaw.in 6269 HC

Order QR

WEB COPY

own." என்று தெரிவித்துள்ளது.

8(xi). பு.சா.1 ன் சாட்சியம் புகார்தாரர் தரப்பு வழக்கினை நிரூபிக்கும் வகையில் அமைந்துள்ளது. எதிரி தரப்பில் புகார்தாரர் தரப்பு சாட்சி (பு.சா.1) குறுக்கு விசாரணை செய்யப்பட்டுள்ளது. பு.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தில்,

1. **"எனக்கும் எதிரிக்கும் எழுத்து மூலமாகவோ, கிரைய உடன் படிக்கை மூலமாகவோ எந்த நேரடியான சம்பந்தமும் இல்லை என்றால் சரிதான். அவர் தான் பணம் வங்கினார். ஆனால் ஆவணம் அவருடைய பினாமி பெயரில் எழுதி வைத்துள்ளார். நான் எதிரியின் வங்கி கணக்கில் பணம் செலுத்தியதற்கான ஆவணம் எதுவும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை என்றால் சரிதான். வேண்டுமென்றால் தாக்கல் செய்கிறேன். நான் எதிரிக்கு எந்த பணமும் வங்கி மூலமாக கொடுக்கவில்லை என்றால் சரியல்ல."**

(20.06.2025 தேதியன்று நடைபெற்ற குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 1 வது பக்கத்தில் 10 வது வரியிலிருந்து 16 வது வரி வரை)

2. **"எதிரியிடம் மிரட்டி பணம் பறிக்கவேண்டும் என்ற நோக்கத்தில் எதிரி மீது காவல் நிலையத்தில் புகார் கொடுத்து 4 காசோலைகளை மிரட்டி வாங்கினேன் என்றால் சரியல்ல. எதிரி சந்திரன் மீது புகார் கொடுத்ததற்கான நகல் நீதிமன்றத்தில் தாக்கல் செய்துள்ளேனா என்றால் எனக்கு ஞாபகமில்லை" என சாட்சியம் அளித்துள்ளார்.**

(13.03.2026 தேதியின்று நடைபெற்ற குறுக்கு விசாரணை சாட்சியத்தில் 3 வது பத்தியில் 5 வது பத்தியில் கடைசி வரியிலிருந்து 4 வது பக்கத்தில் முதல் 3 வரிகள்)

மேற்படி பு.சா.1 குறுக்கு விசாரணை சாட்சியத்தின் படி எதிரிக்கும் புகார்தாரருக்கும் சொத்து சம்பந்தமாக தொடர்பு இருந்ததை என்பதை நிரூபிக்க எழுத்து மூலமான ஆவணங்கள் இல்லை என்பதும் எதிரிக்கு புகார்தாரர் பணம் கொடுத்ததற்கான ஆவணங்கள் இல்லை என்பதும் தெரிய வருகிறது.

8(xii). இவ்வழக்கில் புகார்தாரர் தரப்பில் தாக்கல் செய்யப்பட்டுள்ள பு.சா.ஆ.1 முதல் 9 ஆவணங்கள் மிக கவனமாக பரிசீலனை செய்யப்பட்டது. பு.சா.ஆ.1 இவ்வழக்கு காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே எதிரி 05.05.2022 தேதியிட்ட சட்ட அறிவிப்பு புகார்தாரருக்கு அனுப்பி வைத்துள்ளார்.

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

Case Citation: (2026) ibclaw.in 6269 HC

Order QR

WEB COPY

அந்த அறிவிப்பினை புகார்தாரர் 06.05.2022 அன்று பெற்றுக்கொண்டதாக 13.05.2022 தேதியிட்ட பதில் அறிவிப்பு (பு.சா.ஆ.2) ன் மூலம் ஒத்துக்கொண்டுள்ளார். வழக்கு காசோலைகள் வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பே புகார்தாரருக்கு வழக்கு காசோலைகள் கூடுதல் பொறுப்புறுதிக்காகக் கொடுக்கப்பட்டுள்ள காசோலைகள் அந்த காசோலைகளை திரும்ப ஒப்படைக்கவேண்டும் என்றும், அதில் மேல்நடவடிக்கைகள் எடுக்கக்கூடாது என்றும், புகார்தாரர் அவ்வாறு வசூலுக்கு தாக்கல் செய்தார். எதிரியை கட்டுப்படுத்ததாது என தெரிவிக்கப்பட்டுள்ளது.

8(xiii). இந்நிலையில் புகார்தாரர் வழக்கு காசோலைகள் 06.05.2022 தேதியிட்ட காசோலை (பு.சா.ஆ.4) யை 07.05.2022 அன்றும், 09.05.2022 தேதியிட்ட காசோலையை (பு.சா.ஆ.6) 09.05.2022 தேதியில் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த காசோலைகள் முறையே 09.05.2022 மற்றும் 10.05.2022 அன்றும் பணப்பட்டுவாடா செய்யப்படாமல் மறுக்கப்பட்டு திருப்பபட்டிருப்பது தெரிய வருகிறது.

8(xiv). புகார்தாரருக்கு எதிரி மேற்படி காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்யக்கூடாது திருப்பி தரக்கோரியும் அந்த வழக்கு காசோலைகளை எந்தவித வில்லங்கத்திற்கு பயன்படுத்தக்கூடாது என தெரிவித்து கடிதம் (பு.சா.ஆ.1) 06.05.2022 ம் தேதி புகார்தாரரால் பெறப்பட்டிருப்பது தெரிய வருகிறது. இந்நிலையில் புகார்தாரர் வழக்கு காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு, அந்த காசோலைகளை திருப்பபட்டிருப்பதை பயன்படுத்தி இந்த வழக்கு தாக்கல் செய்திருப்பதாக தெளிவாக தெரிய வருகிறது. காசோலைகளில் உள்ள கடன் அல்லது பொறுப்புறுதி குறித்து பிரச்சனை இருக்கும் நிலையில் அந்தக் காசோலைகளை புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்திருப்பது தெளிவாக தெரிய வருகிறது.

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

Case Citation: (2026) ibclaw.in 6269 HC

Order QR

CRL.OP.No.20955 of 2026

WEB COPY

8(xv). மேலும், புகார்தாரர் 10.05.2022 தேதியிட்ட காசோலை ரூ.5 லட்சத்தையும், 11.05.2022 தேதியிட்ட காசோலை ரூ.5 லட்சமும் புகார்தாரர் வசூலுக்கு தாக்கல் செய்யப்பட்டு அந்த காசோலைகளும் பணம் மறுக்கப்பட்டிருப்பது தெரிய வருகிறது. நான்கு காசோலைகளையும் பணம் மறுக்கப்பட்டது குறித்து புகார்தாரர் 07.06.2022 தேதியிட்ட சட்ட அறிவிப்பு (பு.சா.ஆ.7) மூலம் தெரிவித்து வழக்கு காசோலைக்கான தொகை ரூ.20 லட்சத்தை திருப்பி செலுத்தவேண்டும் என அறிவுறுத்தியிருப்பது தெரிய வருகிறது.

8(xvi). ஆனால், புகார்தாரர் இவ்வழக்கில் பு.சா.ஆ.3 மற்றும் பு.சா.ஆ.5 ஆகிய இரு காசோலைகளை மட்டும் பயன்படுத்தி இவ்வழக்கை தாக்கல் செய்துள்ளார். மீதமுள்ள இரண்டு காசோலைகளை குறித்து எந்தவிதமான விளக்கமும் தெரிவிக்காமல், அந்த காசோலைகளை குறித்து வழக்கு தாக்கல் செய்யாமல் இருப்பதும் தெரியவருகிறது. அதற்கான எந்தவிதமான விளக்கமும் புகார்தாரர் தரப்பில் இவ்வழக்கில் தெரிவிக்கவில்லை. இவ்வழக்கில் புகார்தாரர் வழக்கு காசோலைகளை வசூலுக்கு தாக்கல் செய்வதற்கு முன்பாகவே புகார்தாரர் மேற்படி வழக்கு காசோலைகளை திருப்பி தரவேண்டும் என்றும், அதற்கான பொறுப்பு அல்லது சட்டப்படியான கடன் இல்லை என தெரிவித்துள்ளார். இந்நிலையில் புகார்தாரர் எதிரிக்கு ரூ.20 லட்சம் கொடுத்ததை நிரூபிக்கவேண்டிய பொறுப்புள்ளது. புகார்தாரர் ரூ.20 லட்சம் கொடுத்ததற்கான எந்தவிதமான ஆதாரமும் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை. காசோலைகள் சம்பந்தமான பணப்பயன் எதிரிக்கு கொடுக்கவில்லை என தெரிவிக்கப்பட்டுள்ள நிலையில் அதை நிரூபிக்கவேண்டிய பொறுப்பு புகார்தாரருக்கு உள்ளது. புகார்தாரர் வெறும் வாய்மொழி சாட்சியத்தை தவிர வேறு சாட்சியங்கள் இவ்வழக்கில் தாக்கல் செய்யவில்லை.

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

WEB COPY

5. For the very same set of allegations, the respondent has filed the present complaint before a different Court by presenting the remaining cheques through another bank. Consequently, no useful purpose would be served by proceeding with the trial in the present complaint. The entire proceedings are a clear abuse of the process of law.

6. Accordingly, this criminal original petition is allowed, and the proceedings in S.T.C.No.198 of 2024, pending on the file of the Judicial Magistrate, Fast Track Court, Ambattur, are hereby quashed. Connected miscellaneous petitions are closed.

30-09-2026

Index: Yes/No
Speaking/Non-speaking order
Neutral Citation: Yes/No

Sni

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in

WEB COPY

G.K.ILANTHIRAIYAN, J.

Sni

To

The Judicial Magistrate,
Fast Track Court,
Ambattur.

CRL.OP.No.20955 of 2026

30-09-2026

https://www.mhc.tn.gov.in/judis

IBC Laws | www.ibclaw.in